# வாய்மை

வாய்மை என்பது உண்மை பேசுவது. உண்மை பேசுவது அறச் செயல்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. உண்மை பேசினால் நன்மையே நடக்கும் என்பதனை வாய்மை என்னும் பாடல் விளக்குகின்றது.

ஓர் ஏழை விறகுவெட்டி ஒருவன் விறகுவெட்டி விற்பதற்குக் காட்டுக்குப் போனான். அங்கு அவன் ஒரு மரத்தை வெட்டிக்கொண்டிருக்கும்போது அவனது கோடரி தவறி ஆற்றினுள் விழுந்து விட்டது. அதனால் அவன் குமுறிக்குமுறி அழுதான். அப்போது ஆற்றில் தேவதை ஒன்று தோன்றி ஏன் மகனே அழுகிறாய் எனக் கேட்டது. விறகுவெட்டி நடந்ததைக் கூறினான். ஆற்றில் மூழ்கிய தேவதை கையில் ஒரு தங்கக் கோடரியைக் காட்டி இதுவா உனது கோடரி என்று கேட்டது. அவன் இல்லை என்று மறுத்தான். பின்னர் அத்தேவதை வெள்ளிக் கோடரியைக் காட்டியது. அதற்கும் அவன் மறுத்துவிட்டான். பின் இறுதியில் இரும்புக் கோடரியைக் காட்டியது. உடனே விறகுவெட்டி இதுதான் எனது கோடரி என மகிழ்ந்தான். விறகுவெட்டியின் நேர்மையைக் கண்ட தேவதை மூன்று கோடரிகளையும் விறகுவெட்டியிடம் கொடுத்து உனது நேர்மைக்கும் உண்மைக்கும் இது என் பரிசு என்று கூறி மறைந்தது. உண்மை பேசிய விறகுவெட்டி மகிழ்ச்சியாக வாழ்ந்தான்.